# செய்தி மடல்

ஏப்ரல் - 2021

பொறுப்பதிகாரி

Dr.ஆர்.சுரேந்திரகுமரன்

ஆய்வாளர்கள்

Dr.எஸ்.குமரன்

Dr..பி.குமரேந்திரன்

Dr.அஜினி அரசலிங்கம்

Dr.எம்.குருபரன்

ஆய்வு உதவியாளர்கள்

Dr.கே.ஸ்ரீபவன்

திரு.ஏ.சரோன்

செல்வி.யூ.பௌசிகா

திருமதி.எம்.பாமினி

நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர்

திரு.பி.பிரசாந்

ஒருங்கிணைப்பாளர்

Dr..ரி.வேணிகா

தொகுப்பாளர்கள்

Dr.எஸ்.குமரன்

திருமதி.எம்.பாமினி



எமது தரவு சேகரிப்புக் குழு

**உள்ளடக்கம்**

*சமூக ஈடுபாடும் அது தொடர்பான செயற்பாடுகள் மற்றும் தரவு சேகரிக்கும் அனுபவப் பகிர்வு.*


*பக்கம் 2, 3:* இலங்கை AF குழுவின் ஈடுபாட்டுடன் வடக்கு மாகாண கொவிட்-19 துரித அழைப்பு சேவை

*பக்கம் 4:* தரவு சேகரிப்பு பணியின் கள அனுபவப்பகிர்வு

*பக்கம் 5:* புகைபட தொகுப்பு

# இலங்கை AF குழுவின் தீவிர ஈடுபாட்டுடன் வடக்கு மாகாண கொவிட் - 19 துரித அழைப்பு சேவை

வைத்திய கலாநிதி. எஸ்.குமரன் - MBBS (Jaffna), DFM (Colombo), MD (Colombo)

*சிரேஸ்ட விரிவுரையாளர், சமூக மற்றும் குடும்ப மருத்துவத்துறை, மருத்துவ பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

*குடும்ப மருத்துவர், பல்கலைக்கழக குடும்ப சுகாதார மையம், பிரதேச வைத்தியசாலை, கோண்டாவில்..*

வைத்திய கலாநிதி எம்.பரமேஸ்வரன் MBBS (Jaffna), MSc (Colombo).

*புதிவாளர் சமூக மருத்துவத்துறை.*

துரித அழைப்பெண் சேவை என்பது உடனடியாக அவசர தொலைபேசி ஆலோசனையைப் பெற மக்கள் அழைக்கக்கூடிய தொலைபேசி எண்ணாகும். இதுபோன்ற முதல் சேவை 1953 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் தற்கொலைகளை தடுப்பதற்காக உருவாக்கப்பட்டது. பின்னர் படிப்படியாக வேறு தேவைகளுக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது. தற்போது இது உலகளவில் பிரபல்யம் அடைந்துள்ளது.



வட மாகாணத்தில் முதன் முதலாக நோயாளர் காவு வண்டிகளை மக்கள் பெற வசதியாக இச்சேவை ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின்னர் கடந்த மார்ச் மாதத்தில் யாழ் மாவட்டத்தில் கொரேனா தொற்றுள்ள ஒருவர் அரியாலையில் ஆராதனை ஒன்றினை நடத்தியதாக தகவல் கிடைத்ததை தொடர்ந்து நடாத்தப்பட்ட விசாரணையில் 14 பேரை மாத்திரமே உடனடியாக இனங்காணக் கூடியதாக இருந்தது. இந் நிலையில் உடனடியாக தொலைபேசி இலக்கமொன்று அறிமுகப்படுத்தப்பட்டு தகவல்கள் வழங்குமாறு கோரப்பட்டது. அதன் பயனாக 48 மணி நேரத்தில் அவ்வாராதனையில் கலந்துகொண்ட 312 பேரும் இனங்காணப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொண்டதன் விளைவாக யாழ் மாவட்டம் பெரும் ஆபத்தில் இருந்து தப்பிக்கொண்டது.

மேலும் மக்களுக்கு தொடர்ச்சியாக இச் சேவை தேவைப்பட்ட சமையத்தில் 28.03.2020 அன்று கொரோண தடுப்பு கூட்டத்தில மக்களின் அச்ச உணர்வை நீக்கவும் மக்களுக்கு கொரோனா தொற்று நோய் தொடர்பான விழிப்புணர்வு மற்றும் உதவிகளுக்காகவும் உத்தியோக பூர்வ வட மாகாண கொரோனா தொற்று நோய் தொடர்பான 24 மணி நேர உதவி அழைப்பெண் ஆரம்பிக்கப்பட வேண்டும் என வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி. ஆர்.கேதீஸ்வரன் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க குடும்ப நல வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி. எஸ்.குமரன் அவர்கள் இத்திட்டத்தை செயற்படுத்த முன்னின்று உழைத்து வெற்றியும் கண்டார். அதன் பயனாக அரைமணி நேரத்திற்கும் குறைவான நேரத்தில் வடமாகாணத்தில் கொரோனா தொற்று நோயினால் ஏற்பட்ட



அசாதாரண சூழ்நிலையில் இவை தொடர்பாக சுகாதார ரீதியில் பொதுமக்கள் தமக்கு தேவையான ஆலோசனைகளையும் தகவல்களையும் பெற்றுக்கொள்ள வாரத்தின் 7 நாட்களிலும் 24 மணி நேரமும் செயற்படும் வண்ணம் “கொரோனா தொற்று நோய் தொடர்பான 24 மணி நேர உதவி அழைப்பெண் 021-2217982 0212226666” என்ற உதவி அழைப்பெண் சேவையானது 28.03.2020 அன்று முதல் வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு யாழ்பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் சமூதாய மற்றும் குடும்ப நல மருத்துவத்துறை தமது பூரண ஒத்துழைப்பை நல்கியது. இத்துறை சார்ந்தவர்களான சமுதாய வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி. ஆர்.சுரேந்திரகுமரன் அவர்களும், இத்துறைத்தலைவர் வைத்திய கலாநிதி. பீ.டினேஸ் கூஞ்ஜே அவர்களும் இதில் இணைத்து தமது ஆலோசனைகளையும் ஒத்துழைப்பையும் வழங்கியதன் மூலம் இதன் வினைத்திறனை அதிகரிப்பதில் பெரும் பங்காற்றினார்கள்.

மேலும் குறுகிய நேரத்தில் இச்சேவையினை ஆரம்பித்தனாலும் தொடர்ச்சியாக சேவைகளை வழங்க இதனை மெருகூட்டவேண்டிய தேவைப்பாடு எழுந்தது இதன்போது ஆரம்பம் முதலே நெறிப்படுத்த உதவிபுரிந்த வட மாகாண சமுதாய வைத்திய நிபுணர வைத்திய கலாநிதி.ஆர்.கேசவன் அவர்கள் உரிய முறையில் வழிகாட்டல்களை வழங்கியதன் அடிப்படையில் இச்சேவையானது மக்கள் மத்தியில் பிரபல்யமான சேவையாக மாறியது. இதன்பின்னர் மக்கள் மத்தியில்

எழுந்த பல்வேறுபட்ட தேவைகளையும் பிரச்சினைகளையும் இலகுவாக தீர்க்கக்கூடியதாக இருந்தது.

முக்கியமாக வைத்தியசாலைக்கு வருகின்ற கிளினிக் நோயாளர்கள் வருவதற்கு அஞ்சியவர்களாகவும் மாவட்டங்களிடையிலான போக்குவரத்துக்கள் முற்றாக நிறுத்தப்பட்ட நிலையில் வரமுடியாதவர்களாயும் இருந்தனர். இவர்கள் இவ்விலக்கதிற்கு அழைத்து தமது சூழ்நிலைகளை தெளிவு படுத்தினார்கள். கிளினிக் நோயாளர்களை கிளினிக் நடைபெறுகின்ற வைத்தியசாலைகளுடன் தொடர்பை ஏற்படுத்தி கொடுக்கப்பட்டதன் காரணமாக பிரச்சினைகளும் ஐயப்பாடுகளும் தீர்க்கப்பட்டதுடன் வீட்டிலிருந்தே கிளினிக் மருந்துகளையும் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது. இக்காலத்தில் பல தனியார் மருந்தகங்கள் தொடர்பு கொண்டு தமது மருந்துப்பொருட்களை வீடுகளுக்கே சென்று விநியோகம் செய்ய முன்வந்தனர்.
அவர்களுடைய தகவல்கள் திரட்டப்பட்டு ஒழுங்கமைக்கப்பட்டது. இதன் காரணமாக தனியார் மருந்தகங்களில் மருந்துகளை பெற்றுக்கொள்ள வேண்டியவர்கள் இத் துரித அழைப்பெண் சேவையை தொடர்பு கொண்டார்கள். அவர்களுக்கு அருகிலுள்ள தனியார் மருந்தகங்களின் மருந்துகளை பெற்றுக்கொள்ள வழிவகை செய்யப்பட்டது.



அத்துடன் தடிமன், காய்ச்சல் தொண்டைநோ, மூச்சுக்கஸ்ரம் போன்ற கொரோனா தொடர்பான அறிகுறிகள் காணப்பட்டபோது மிகவும் பயந்தவர்களாகவும் என்ன செய்வதென்று அறியாது திகைத்தவர்களாயும் காணப்பட்டவர்கள் துரித அழைப்பெண் சேவையை தொடர்பு கொண்ட போது வட மாகாண சமுதாய வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி.ஆர்.கேசவன் அவர்களின் ஆலோசனையைப் பெற்று உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டது. அத்துடன் கொரோனா அறிகுறிகள் தவிர்ந்த ஏனைய நோயாளர்களுக்கு குடும்ப நல வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி.எஸ்.குமரன் அவர்களின் ஆலோசனையைப்பெற்று வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டன. இதனால் அவர்கள் மத்தியிலான பயவுணர்வினை நீக்கி உரிய நடைமுறைகளை மேற்கொள்ள வசதியாக இருந்தது.

மேலும் இக்காலத்தில் அதிகமான மக்களுக்கு நோயாளர் காவு வண்டி சேவை தேவைப்பட்டதன் விளைவாக அவற்றை உரிய முறையில் பெறுவதில் பல சிக்கல் நிலைகள் தோன்றின. இதன் போது வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி. ஆர்.கேதீஸ்வரன் அவர்களுடன் தொடர்பு கொண்டு உடனடியாக உரிய தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டது. மேலும் 1990 நோயாளர் காவு வண்டி சேவைக்கு மேலதிகமாக வட மாகாணத்தில் உள்ள சகல வைத்தியசாலைகளின் நோயாளர் காவு வண்டிகளையும் ஒருங்கிணைத்ததன் பயனாக இச்சேவை தேவைப்படுவோருக்கு அவர்களின் அருகிலுள்ள வைத்தியசாலைக்குரிய நோயாளர் காவு வண்டிகளை துரிதமாக பெற்றுக்கொள்ள வழிசெய்யப்பட்டது.

அத்துடன் வேறு மாவட்டங்களில் தேவை நிமித்தம் சென்று தங்கள் மாவட்டங்களுக்கு திரும்ப முடியாமல் அல்லல்ப்பட்ட பலருக்கு உரிய முறையில் வழிகாட்டல்களும் ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. ஆனாலும் சட்டவிரோதமாக பலர் உள்நுழைந்த போது அச்சமடைந்த மக்கள் துரித அழைப்பெண் சேவைக்கு தொடர்பு கொண்டு தகவல்களை வழங்கினார்கள். இதனால் அவர்கள் இனங்காணப்பட்டு உரிய நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் சட்டவிரோதமாக உள்நுழைந்த சிலர் தாமாவே அழைப்பை மேற்கொண்டு சுயமாக தமது விபரங்களை தெரியப்படுத்தினர். இவர்களுக்கும் உரிய நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதைவிட போதைப் பொருளுக்கு அடிமையானோர், மனரீதியாக பாதிக்கப்பட்டோர், தற்கொலைக்கு முயன்றோர் என பலர் இதன் மூலம் உரிய வழிகாட்டல்களை பெற்றுக்கொண்டனர். அத்துடன் வாழ்வாதார உதவிகள் தேவைபட்டோரும் இத்துரித அழைப்பெண் சேவையினையே தெரிவு செய்தனர். இவர்களுக்கும் மனிதாபிமான ரீதியில் உதவி கிடைக்கக்கூடிய வகையில் உரியவர்களுடன் இணைப்பை ஏற்படுத்தியதனால் அவர்களும் பயனடைந்தார்கள். இவ்வாறாக பல சேவைகளை வழங்கக்கூடியதாக அமைந்தது.

இப்படியான பலவகையான சேவைகளை ஒரே இணைப்பில் வழங்கக்கூடிய வகையில் காணப்பட்டதால் இதனை ஒருங்கிணைப்பது என்பது பெரும் சவாலாக காணப்பட்டது. இதனை ஒருங்கிணைத்து இன்று வரை வெற்றிகரமாக பயணிக்க உழைத்தவர் வைத்தியர்.என் பரமேஸ்வரன் ஆவர். அவரது ஒருங்கிணைப்பின் கீழ் இவ் வட மாகாண துரித அழைப்பெண் சேவையில் வைத்தியர் க.ரூபவிநோத் வைத்தியர். ரா.ஸ்ரீபாலகுமரன் வைத்தியர். செ.ஜெனன் வைத்தியர். ர.குயின்ரன் மற்றும் மருத்துவபீட மாணவன் வி.யதுஷன் ஆகியோர் திறம்பட பணியாற்றியவர்களாவார்.
மேலும் வட மாகாணத்திற்கென ஆரம்பிக்கப்பட்ட இச்சேவையை வட மாகாணத்திற்கு வெளியில் வசிப்போரும் தொடர்பினை மேற்கொண்டு சேவைகளையும் ஆலோசனைகளையும் பெற்றுக்கொண்டனர். இப்படியாக இச் சேவை இன்று மக்களால் பேசப்படும் ஒன்றாக மாறக்காரணம் இங்கு குழுவாக இணைந்து செயலாற்றியமையே ஆகும். இங்கு பணியாற்றிய சகலரினதும் குறிக்கோள் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதுடன் கொரோனா பற்றிய விழிப்புணர்வையும் ஏற்படுத்துவதாகும். இதை செயற்படுத்த அனைவரும் இரவு பகல் பாரமல் பணியாற்றியமையே தற்போது கிடைத்த வெற்றியாகும். அத்துடன் குடும்ப நல வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி. எஸ்.குமரன் அவர்களால் எழுந்தமானமாக தெரிவு செய்யபட்ட 15 பேரிடம் தொடர்பினை ஏற்படுத்திய போது தமக்கு பூரண திருப்தி இருப்பதாக அவர்கள் கூறிய கருத்துக்கள் இதற்கு சான்றாக அமைகின்றன. மேலும் இச்செயற்திட்டம் கொரோனா தாக்கம் குறைந்த மாகாணமாக மாறுவதற்கு பெரிதும் உதவிபுரிகின்றது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். இச் சேவை தற்போது நேயம் பணியாளர்களையும் இணைத்துக் கொண்டு தலைநிமிர்ந்து வெற்றியுடன் வீறு நடைபோடுகின்றகின்றது.

## தரவு சேகரிப்பு பணியின் கள அனுபவப்பகிர்வு



*செல்வி.எஸ்.பிரணவி*
*(தரவு சேகரிப்பு உதவியாளர்)*

எப்போதுமே ஒரு பிரதேசத்திலோ அல்லது கிராமத்திலோ எமது அணி தரவு சேகரிக்கும் நிகழ்ச்சி திட்டத்தை மேற்க்கொள்வதற்கு முன்னராக எமக்கென பணியாற்றும் ஒருங்கிணைப்பாளர் ஒருவர் உள்ளார். அவரே நாங்கள் பணியாற்றுவதற்கு அது பாதுகாப்பான இடமாக மற்றும் எமக்கு எந்தவித அசௌகரியங்களும் ஏற்படாதவிடத்து அப்பிரதேசங்களுக்குரிய சமூக பொறுப்பாளர்களான கிராம சேவையாளர்கள் மற்றும் பிரதேச சபை அலுவலர்களிடம் கலந்துரையாடி எமக்கான சீரான ஒரு தொழிற்திட்ட நிரலை செவ்வனே அமைத்து கொடுப்பார்.

அவ்வாறு தான் அன்றும் எமது ஒருங்கிணைப்பாளர் குறித்த பிரதேசத்திற்கு ஒருவாரத்திற்கு முன்னரே சென்று பொதுச் சுகாதார பரிசோதகரிடம் அவ்விடத்தில் எந்த விதமான கொரோனா தொற்றாளர்களோ அல்லது எமக்கு வேறேதும் இடையூறு விளைவிக்கும் எந்த விதமான சுகாதார சீர்கேடுகளும் இல்லையென உறுதிப்படுத்தி கொண்டதனை தொடர்ந்து அப்பகுதிக்குரிய கிராம சேவையாளாரிடம் பௌதீகவியல் மற்றும் சமூகவியல் நிலவரங்களை தெளிவாக ஆராய்ந்து கொண்டு முற்றுமுழுதான எமது பாதுகாப்பையும் உறுதிப்படுத்திக் கொண்டு அக்கிராமத்திற்கு செல்வதற்கான எம் ஒருங்கிணைப்பாளரின் வழிகாட்டுதலோடு அப் பிரதேசத்திற்கு செல்ல ஆயத்தமானோம்.

வழமையான நாட்கள் போலவே காலையில் எமது பணிகளை ஆரம்பிப்பதற்காக குறிப்பிட்ட கிராமத்திற்கு என்னுடன் சார்ந்த குழுவுடன் சென்றிருந்தேன். இருப்பினும் வழமைக்கு மாறாக அந்த கிராமத்தை ஒரு ஆழ்ந்த அமைதி ஆட்கொண்டிருந்தது. அதுவரை நேரமும் பணிகளை ஆரம்பிப்பதற்கு உற்சாகமாக காத்திருந்த நாம் சற்று குழப்பமான மனநிலைக்கு தள்ளப்பட்டோம். காரணம் அங்கே நிலவிய நிசப்தமான சூழல் மட்டுமல்ல நாம் சந்திக்க வேண்டிய பங்கேற்ப்பாளர்களின் வீடுகளில் பெரும்பாலானோர் அக்கிராமத்தை விட்டே வெளியேறி இருந்தனர். அவ்விடத்திலே நிலவரத்தை அறிந்து கொள்ளக்கூட ஒருவரும் காணப்படவில்லை. இத்தகைய சூழ்நிலையில் எமது குழுவில் அமைதியற்ற மனநிலையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர எம்மில் ஒருவர் கிராம சேவையாளருக்கு அழைப்பினை மேற்கொள்ளும்படி கோரியதற்கு இணங்க எம்மால் கிராம சேவையாளருக்கு தொலைபேசி அழைப்பு மேற்கொள்ளப்பட்டது. அதன் பின்பு தான் எமக்கு அக்கிராமத்தின் சற்றும் எதிர்பார்த்திராத மோசமான நிலமை அறியப்பட்டது. அது என்னவெனில் நாம் சென்றிருந்த காலை பொழுதுக்கு முன்னைய இரவு பொழுதில்தான் அவ்விடத்திலே தனிப்பட்ட நபர்களுக்கிடையிலான தகராறு ஒன்றில் இரட்டை கொலைகள் நடந்திருப்பதாகவும், குறித்த கொலையாளிகள் அக் கிராமத்திற்குள்ளேயே மறைந்திருப்பதாகவும் அறிந்து கொண்டோம். அவ்விடயத்தை கேள்விப்பட்டவுடன் குழுவில் இருந்த அத்தனை பேருக்கும் தூக்கிவாரிப்போட்டது. ஒருவரை ஒருவர் பார்த்த வண்ணம் வாய்மூடி அதிர்ச்சியில் உறைந்து போயிருந்தோம். மரணபீதி ஒன்று அனைவரின் நெஞ்சையும் ஆட்கொண்டிருந்தது. இறுதியாக எம் மனங்களை நாமே திடப்படுத்திக் கொண்டு ஒருங்கிணைப்பாளருக்கு அழைப்பினை ஏற்படுத்தி நடந்த விடயத்தின் வீரியத்தினை அறியப்படுத்தினோம். பின்பு எம் ஒருங்கிணைப்பாளரின் அறிவுறுத்தலின்படி அங்கிருந்து புறப்படுவதற்கு ஆயத்தமான வேளை எம்மை ஏற்றிச்சென்ற வாகனமும் நாம் நின்றுகொண்டிருந்த இடத்திலிருந்து சற்று தொலைவில் தரித்து நின்றிருந்தது. அவ்விடத்தை விட்டு வேகமாக கால்நடையாகவே நகரத் தொடங்கினோம். அப்படியே எமது வாகன ஓட்டுனரையும் தொடர்பு கொண்டு நாம் பயணித்துக் கொண்டிருக்கும் இடம் நோக்கி வருமாறு அழைத்தோம். மரண பயம் நெஞ்சின் ஓரத்திலிருக்க வேகநடைகள் காலில் மெல்ல வலிக்க ஒருவருக்கொருவர் வழித்துணையாக இருக்க சென்றிடலாம் என்ற துணிவுடன் ஒருவழியாக இறுதியில் வாகனத்தை வந்தடைந்தோம்.

வாகனம் மெது மெதுவாக அக்கிராமத்தை விட்டு வெளியேற எம்மனங்களில் நிறைந்திருந்த பீதியும் மெல்ல மெல்ல விலகியது. ஒருவழியாக மருத்துவ பீடத்தை வந்தடைந்தவுடன் அனைவர் உள்ளங்களிலும் பீடித்திருந்த பயம் விலகி மட்டற்ற மகிழ்ச்சிக்குள்ளானோம். அப்படியே இந்த வழமைக்கு மாறான நிகழ்வை வெற்றிகரமாக கடந்து முடித்தோம்.

இருப்பினும் முழு நிறைவடையாத அக் கிராமத்திற்கான தரவு சேகரிப்பு பணியினை நிச்சயமாக எத்தடைகள் வரினும் முடித்தே ஆக வேண்டும் என்கின்ற எமது அவாவும் ஒருங்கிணைப்பாளரின் தூண்டுதலும் எம்மை மீண்டும் அவ்விடத்திற்கு அழைத்துச் செல்ல வழிகோலியது.

ஆயினும் இம்முறை எமக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் எமது ஒருங்கிணைப்பாளரினாலும் ஏனைய ஆராய்ச்சி நிர்வாக பொறுப்பாளர்களினாலும் மும்மடங்கு பலப்படுத்தப்பட்டது. அத்தோடு அக்கிராம மக்களின் மனநிலை தற்சமயம் எவ்வாறு இருக்கும் என்றும் அவர்களை நாம் எவ்வாறு அணுக வேண்டுமென்றும் மற்றும் எவ்வாறு உரையாட வேண்டுமென்றும் உளவியல் ரீதியான பயிற்சி ஒன்றும் தற்காப்பு நடைமுறைகளுக்கான பயிற்சியும் வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து மனதின் ஓரத்தில் சிறு பயமிருந்தாலும் எமது நிர்வாகத்தினர் தந்த பெருந் துணிவுடன் வெற்றிகரமாக மீண்டும் அக்கிராமத்தில் தரையிறங்கினோம்.

அப்படியே நாம் சந்திக்க வேண்டிய அனைத்து பங்கேற்ப்பாளர்களையும் சிறந்த முறையில் அணுகி அவர்களின் அந்நேர மனநிலையை அறிந்து அவர்களுடன் நட்புறவாக பேசி அவர்களின் மனங்களை தேற்றுவித்து எமது பணிகளை செவ்வனே முடித்துக் கொண்டு மகிழ்ச்சிகரமாக அந்நாட்பொழுதை கழித்து வெற்றிக்களிப்புடன் பல்கலைக்கழகத்தை வந்தடைந்தோம்.

என்னதான் எழுத்துக்களில் உருவகித்தாலும் அன்று அந்த நொடியில் எம் மனதை பீடித்திருந்த பயங்களும் எண்ணவலைகளும் நிச்சயமாக இவ் வரியின் மூலம் விபரித்திடமுடியாதவை. இவ்வளவு தான் வாழ்க்கை என்றிருந்த எமக்கு இதுவல்லவா வாழ்க்கை என எமது ஆராய்ச்சி குழுவின் ஒவ்வொரு பயணங்களும் புதுப்புது அனுபவங்களையும் சுவாரஸ்யம் நிறைந்த நிகழ்வுகளையும் இதுவரை நாம் கண்டிராத வாழ்வியல் முறைகளையும் நீட்சித்துக்கொண்டே செல்கிறது.

# யாழ்ப்பாணத்தில் தரவு சேகரிப்பு செயல்முறை





தரவு சேகரிப்பாளர்களுக்கான பயிற்சி அமர்வு







தரவு சேகரிக்க சென்ற பகுதிகள்






பங்கேற்பாளர்களிடமிருந்து தரவு சேகரிப்பு






தரவு சேகரிப்பின் போது தரவு சேகரிப்பாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்



*தொகுத்தவர் –*
*செல்வி.எஸ்.லோட்ஸ் ஜெனஸ்திகா*